**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 19 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனதுஅபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக்கொள் கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட றோலரின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கடந்த இரு வருடங்களாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்காமையினால் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | றோலரின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். | றோலரின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்துப் பெறுமதியில் உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 126 (iii) (ஊ) | வருமானப் பரிசோதகரினால் ரூபா 170,550 பெறுமதியான 67 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கட்டணம் அறவிடுவதற்கும் அவற்றை செலுத்தத் தவறின் விளம்பரங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 571 | ரூபா 418,700 பெறுமதியான கேள்வி வைப்புக்கள் மற்றும் ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | மீளளிப்பதற்காக உரியவர்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களைப் பெறுவதற்கு அல்லது அவற்றை கட்டுக்காப்பில் வைப்பதற்கு நிர்வாகரீதியாக பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்த 30 உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தும், உரிய சுற்றுநிருபத்திற்கமைய நிலுவையை பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்று நிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமையநடவடிக்க மேற்கொள்ளப்படல் வேண்டும். | பிணைப்பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 69,101,854 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 104,354,496 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவைவருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம் *** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம் *** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 14,118,700 | - | 14,936,876 | 20,698,175 | 14,028,700 | - | 15,105,496 | 17,254,351 |
| வாடகைகள் | 43,696,800 | - | 42,860,188 | 2,329,771 | 41,083,800 | - | 41,137,004 | 2,354,221 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,978,000 | - | 2,896,341 | - | 6,293,000 | - | 8,305,231 | 21,250 |
| ஏனைய வருமானம் | 94,606,854 | - | 85,319,492 | 18,431,747 | 92,961,400 | - | 114,204,152 | 119,212,828 |
| | 157,400,354 | - | 146,012,897 | 41,459,693 | 154,366,900 | - | 178,751,883 | 138,842,650 |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம்ரூபா 178,751,883 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 146,012,897 ஆக குறைவடைந்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா32,738,986 இனால் குறைவடைந்திருந்தது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**2.2.3 வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 17,227,392 பெறுமதியான ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதனவரி நிலுவைகள் அறவீடு செய்யப்பட்டுவருகின்றது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 92,090 பெறுமதியான கடை வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வாடகை தொடர்பாக வழக்கு நடைபெறுகின்றது. |
| (ஆ) மீளாய்வாண்டில் ரூபா 2,120,526 பெறுமதியான குத்தகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குத்தகையாளருக்கு எதிராக சிவில் வழக்கு நடைபெற்று வருகின்றது. |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,295,521 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா 18,431,747 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளையும் முத்திரைக் கட்டண நிலுவைகளையும் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக்கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

## (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் காலத்தில் அனைத்து நிதிமூலமான வேலைகளிற்கும் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்படும் |

## (ஆ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 34 செயற்பாடுகளில் 31 செயற்பாடுகளுக்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 6,325,000 பெறுமதியான 03 செயற்பாடுகளை செயற்படுத்த முடியாதிருந்தது. | பாதீட்டின் பிரகாரம் செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டு அபிவிருத்தி நிதி ஒதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது |

## (இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்பிக்க வேண்டிய திகதியில் 06 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் ஒப்பந்தகாலம் முடிவடைந்து 04 – 07 மாதங்களாகியும் நாளதுவரை குறிப்பிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகளினை உரிய நேரத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேலைகளினைமுடிப்பதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் | தேசிய கொள்கைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ள | மீளாய்வு ஆண்டில் செலவினமாக ரூபா 2,709,810 |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 2,709,810 செலவினம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது அத்துடன் சபையின் வருமானமாக ரூபா 2,137,647 பெறப்பட்டிருந்தது. | வேண்டும். | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வருமானமாக ரூபா 2,137,647 பெறப்பட்டிருந்தது. |
| (ii) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான பிரச்சினை காணப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக குப்பைகள் வாகனங்களிலிருந்து வீதி வழியே கொட்டி செல்லப்படுகின்றது. | மூடிய வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரப் பிரச்சினைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூடிய வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுகாதார தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நோய் எதிர்ப்பு மருந்து ஒவ்வொரு வருடமும் சுகாதார தொழிலாளர்களுக்கு ஏற்றப்படுகின்றது. |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் நுளம்பு பெருகுவதனையும் துர்நாற்றம் ஏற்படுவதனையும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நுளம்பு பெருகுவதைத்தடுப்பதற் குளந்தவிதமான தெளிகருவியும் சிபார்சு செய்யப்படவில்லை. |
| (ii) | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் சுன்னாகம்கொத்தியாலடிப் பிரதேசத்தில் 08 செப்தெம்பர் 2016 ஆம் திகதி தொடக்கம் நிர்மாணிக்கப்பட்டு வந்த மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாணிப்பு வேலைகள் 2018 மார்ச் 13 இல் நிறைவு செய்யப்படாமல் நிறுத்தி | மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாணிப்பு வேலைகளை முடிவுறுத்தி சபையின் எல்லைக்குட்பட்ட மலக்கழிவுகளை சுத்திகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாததால் கையளிக்கப்படவில்லை. |

வைக்கப்பட்டுள்ளது. இம் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாண வேலைகள் நாளதுவரை பூர்த்தி செய்யப்பட்டிராத காரணத்தினால் சபையின் எல்லைக்குட்பட்ட மலக்கழிவுகளை சுத்திகரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | உரிய காலத்தில் மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட வேண்டும். | வேறு திணைக்களிலிருந்தான தாமதத்தினால் காலம் தாழ்த்தி வழங்கப்பட்டது |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 600,000 பெறுமதியான வழங்கப்பட்ட ஒப்பந்த முற்பணம் சபையினால் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள பட்டிருக்கவில்லை. | முற்பணத்தினை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் முற்பணம் சீர்செய்யப்படும். |
| (ஈ) | பிரதேச சபைக்குச் சொந்தமான 32 பரப்புக் காணியில் அனுமதியற்ற முறையில் மக்கள் அத்துமீறி குடியமர்ந்துள்ளனர். இக் குடியேற்றம் தொடர்பாக பிரதேசசபையினால் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதி அற்ற குடியேற்றம் தொடர்பான வழக்கினை விரைவில் முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அனுமதியற்ற குடியேற்றம் தொடர்பாக வழக்கு நடைபெற்று வருகின்றது. |
| (உ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 207,997,141 அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்பில் உள்ள நிதியினைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வைப்புக்களுக்கு நோக்கம் குறிப்பிடப்பட்டு அபிவிருத்தி ஒதுக்கக்கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 17 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் வீடுகள், கட்டடங்களுக்கு சோலைவரி அறவிடுவதற்காக சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டில் 24,669 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | K படிவம் உரிய காலத்தில் விநியோகிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் இத்தவறுகள் சீர்செய்யப்படும். |
| (ஆ) கல்லுண்டாய் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் தொடர்பாக சபைக்கு எதிராக AR/175/15 ஆம் இலக்க வழக்குத் தொடரப்பட்டிருந்த போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | இனி வருங்காலங்களில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படும் |
| (இ) 05 ஏப்ரல் 2000 அன்று சபையினால் ரூபா 3,242,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 60 பரப்பு வலிநுங்கை காணியின் உரிமைத்தன்மை தொடர்பில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் 2002 திசெம்பர் 05 ஆம் திகதியிலிருந்து L/168 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | வலிநுங்கைக் காணி தொடர்பான வழக்கு நிலுவையாக உள்ளதனால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 07 வாகனங்கள் நாளதுவரை சபையின் பெயருக்கு உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. |

### 3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுன்னாகம் உப அலுவலகத்தில் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது 25 புத்தகங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பார்வைக்குச் சமர்ப்பிக்கப்படாத புத்தகங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 பெறுகை

### பெறுகைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறிமுறைகள் 3.6.1 இன் பிரகாரம் மீள்கொள்வனவுக் கட்டளை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீள்கொள்வனவுக் கட்டளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் | இனிவரும் காலத்தில் அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறிமுறைகள் 3.6.1 இன் பிரகாரம் மீள்கொள்வனவுக்கட்டளை நடைமுறைப்படுத்தப்படும் |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறிமுறைகள் 1.4 இன் பிரகாரம் பெறுகையின் ஒழுக்கவியல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுகையின் ஒழுக்கவியல் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் | அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறிமுறைகள் 1.4 இன் பிரகாரம் பெறுகையின் ஒழுக்கவியல் நடைமுறைப்படுத்தப்படும். |
| (இ) | ஒப்பந்தகாரரிடமிருந்து செயலாற்றுகைப் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | செயலாற்றுகைப் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | செயலாற்றுகைப் பிணைப் பொறுப்பு இனிவரும் காலத்தில் பெறப்படும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும் செலவினங்களையும் ஒப்பிடும் போது ரூபா 18,376,151 இனால் சாதகமாகக் காணப்படுகிறது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |